**30.10.2025**

**MCOP.No.54/2022**
**ம.சா.1 : பிரபாகரன்**
**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) விபத்து சமயம் நான் தெற்கில் இருந்து வடக்கு திசை நோக்கி வந்தேன். சென்னை பல்லாவரத்தில் இருந்து விழுப்புரம் கோவிலை நோக்கி சென்று கொண்டு இருந்தேன். எனது முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல பாண்டிச்சேரி பதிவு எண் கொண்ட கார் நிதானமாகவும் சரியான வேகத்தில் தான் வந்தது என்றும் நான் தான் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் (முதல் விசாரணை ஆவணம்). நான் கோவிலுக்கு போகும் அவசரத்தில் தான் நான் வாகனத்தை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல.

2) எனது முதல் விசாரணையில் இரு சக்கர வாகனம் மற்றும் எனது கைக்கடிகாரம் சேதாரம் ஆனதற்கான ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இரு சக்கர வாகனம் தற்போது காவல் நிலையத்தில் தான் உள்ளது. தற்போதும் நான் வேலைக்கு சென்று கொண்டு இருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். என்னை வேலையில் அவமானப்படுத்தி கொண்டு வருகிறார்கள். நான் தற்போதும் வேலைக்கு சென்று கொண்ட இருப்பதால் எனக்கு எவ்வித வருமான இழப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் எனக்கு வருமான இழப்பீடு தலைப்பின் கீழ் நான் எவ்வித தொகையும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல.

3) 2022ல் ஏற்பட்ட விபத்திற்கு ம.சா.ஆ.23 படி 10.05.2025ல் மூன்று வருடம் கழித்து கால தாமதம் செய்து நான் சான்று பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவர் பரிசோதித்து கால் இன்னும் கூடவில்லை கூடிய பிறகு தான் சான்றிதழ் அளிக்கப்டும் என்று சொல்லி விட்டார். ம.சா.ஆ.23 ல் ரூ.1.50 லட்சம் எதிர்கால மருத்துவ செலவு என்று சான்று கொடுத்துவிட்டு மா.சா.ஆ.24ல் ஒரே மாதத்தில் ரூ.80 ஆயிரம் என்று எதிர்கால மருத்துவ செலவு என்று சான்று கொடுத்துள்ளது எதிர்கால மருத்துவ செலவிற்காக மிகைப்படுத்தி பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் போட்டுள்ள மருத்துவ பில்கள் ரூ.2,46,447 தொகையில் கழிக்கப்ட வேண்டிய தொகை 1,47,596 என்று சொன்னால் சரியல்ல. நான் ஓரியண்டல் இன்சூரன்சில் கங்கா மருத்துவமனை பில்களில் மருத்துவ செலவுகளில் ரூ.1,25,793/- வரிசை எண்.5 படி கோரி பெற்றுள்ளளேன் என்றால் சரிதான். அது என்னுடைய தனிநபர் இன்சூரன்ஸ் தொகை.

4) அதே போல கங்கா மருத்துவமனை வரிசை எண்.5 படி சலுகை தள்ளுபடி தொகை ரூ.2598/- பெற்றுள்ளேன். அதேபோல எஸ்கே பார்மசி கிரிடிட் பில்லில் ரூ.9596/- பெறப்பட்டுள்ளது. மேற்படி பில் ஏற்கனவே வரிசை எண்.6ல் (IP Bill) காண்பிக்கப்பட்டுள்ளதால் அது பொறுத்த வரைக்கும் அது இரு முறை கோரப்பட்டுள்ளது. அதே போல எஸ்கே பார்மசி பில்லில் ரூ.5224/- இரு முறை கோரப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த பில்கள் வரிசை எண்.7,8,9,10,11-ல் காண்பிக்கப்பட்டுள்ள நிலையில் வரிசை எண்.6 ஆனது நீக்கப்பட வேண்டும் (Double entry). அதேபோல ராசி லெதர்ஸ் ரூ.4408/- வரிசை எண்.54 (Non medical) பெறப்பட்டது. அதேபோல மதர்ஸ் ஆர்தோ சென்டரில் prescription bill ரூ.4905/- வரிசை எண்.23,24,61 பெறப்பட்டுள்ளதில் மொத்தமாக வாங்கிய மருத்துவ பில்களில் ரூ.2,46,407/-ல் ரூ. 1,47,596 கழிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனவே மேற்படி மருத்துவபில்களுக்கு நான் தாக்கல் செய்துள்ள ரூ.2,46,407/-ல் ரூ.98,844/- பெறக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. அசல்

பில் தொலைந்து விட்டது. போக்குவரத்து பில்களில் ரூ.1,56,250/-ல் 1,29,250/- பெயரில் இல்லாத போக்குவரத்து பில்கள் என்பதால் அவை கழிக்கப்பட வேண்டியவை என்றால் சரியல்ல. நான் போக்குவரத்து பில்கள் தலைப்பின் கீழ் ரூ.27,000/- மட்டுமே அனுமதிக்கதக்கது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள போக்குவரத்து பில்களில் எதிலும் பெயர் இல்லை என்றால் சரிதான் (குறிப்பு : வரிசை எண். 2 முதல் 17 வரை பெயரில்லை).

5) நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்டுள்ள தொகைகள் அதிகமானது என்றும் தற்போது வரை ஊனச்சான்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் 4 வருடங்களில் ஆறும் தன்மை கொண்டவை தான் என்றும் எனவே எதிர்கால மருத்துவ செலவு தேவைப்படாது என்று சொன்னாலும் சரியல்ல. எனது அம்மாவின் வழக்கை 2023ல் முடித்தும் நான் வழக்கை உடனடியாக விசாரணை செய்யாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனவே கால தாமத காலத்திற்கான வட்டி தொகை எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

6) நான் தாக்கல் செய்துள்ள எந்த சம்பள சான்றிதழிலும் நான் வேலைக்கு தகுதியான நபர் என்றோ அல்லது வேலை விட்டு செல்லுமாறோ குறிப்பு எதுவும் இல்லை என்றும் நான் தற்போதும் நிறுவனத்தில் வேலை செய்து வருவதால் நான் வேலைக்கு தகுதியான நபர் அல்ல என்று சொல்லும் சங்கதிகள் முற்றிலும் தவறு என்றால் சரியல்ல. மேற்படி நிறுவனத்தில் இருந்து நான் வேலைக்கு தகுதியான நபர் அல்ல என்று எவ்விதமான அறிவிப்போ குறிப்போ தரப்படாத நிலையில் எனக்கு எவ்வித வேலை இழப்பும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் 2022க்கு பின்னிட்டு விசாரணைக்கு ஏற்பட்ட கால தாமதத்திற்கு எவ்வித பதில் விளக்கமும் சொல்லப்படவில்லை என்றும் நான் மனுவில் இழப்பீடு தொகை மிகவும் அதிகம் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும்

ஆவணத்தில் (ம.சா.ஆ.22) எந்த இடத்திலும் நான் வேலைக்கு தகுதியான நபர் அல்ல என்று எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.10.30 18:08:21 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**